

விஜயவாடா மாநாட்டில் ஹெக்டே பேச்சு

மாநிலங்களிடையிலான பிரச்னைகளை தீர்க்க மத்ய உதவியை நாடமாட்டோம்

விஜயவாடா, மே. 29— ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் தங்களுக்கிடையிலான பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இனிமேல் மத்ய அரசை அணுகாது என்று கர்நாடக முதல்வர் ஹெக்டே அறிவித்தார்.

''இந்த 3 மாநிலங்களுக்கு இடையேயான நட்புறவை. உலகின் எந்தச் சக்தியினாலும் குலைக்க முடியாது'' என்றும் அவர் கூறினார்.

விஜயவாடாவில், தெலுங்கு தேசம் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர்களின் ரகசிய ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு, சனியன்று இரவு நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக் கூட்டத்தில் ஹெக்டே உரையாற்றினார்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் பிராந்தியக் கட்சிகள், மற்றும் 9 தேசியக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் ஒரே மேடையில் பேசினர்; தெலுங்கு தேசம் தலைவர் ராமாராவின் பிறந்த நாள் விழாவாகவும் அது அமைந்தது.

இந்தக் கூட்டத்தில் பேசுகையில் இதற்கு முன்பு, ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம் ஆகியவற்றிடையே ஏதேனும் பிரச்னைகள் தோன்றினால், அவை மத்ய அரசின் உதவியை எதிர்நோக்கும் நிலை இருந்து வந்தது. இனி அத்தகைய அவசியம் நேராது. இந்த மாநிலங்கள் தங்களுக்கிடையேயான பிரச்னைகளைத் தாங்களே சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளும்; ஆனால்மத்ய அரசுக்குத்தான் இது பிடிக்காது'' என்று ஹக்டே கூறினார்.

''தெலுங்கு கங்கை'' திட்டத்தை ஹெக்டே வெகுவாகப் புகழ்ந்து பேசினார்; ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பின் சின்னம் இது என்று அவர் சொன்னார்.

குறிப்பிட்ட சில பேர் மட்டுமே நாட்டை ஆள முடியும் என்று கருதப்பட்டு வந்ததை என்.டி.ராமாராவ் தமது அபார வெற்றியின் மூலம் சுக்கு நூறாகத் தகர்த்து விட்டார் என்று ஹெக்டே கூறினார். ஆந்திரத்துக்கும் கர்நாடகத்துக்கும் இடையே இப்போது நிலவும் நெருக்கமான நட்புறவைப் போல, இந்த இரு மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடந்த போது கூட நிலவியதுஇல்லை என்று ஹெக்டே சொன்னார்.

இம்மாநாட்டில் ஜெகஜீவன் ராம் உரை நிகழ்த்துகையில், இந்திரா காங்கிரஸ் கட்சியின் மோசமான ஆட்சியை ஒரு தனி நபரால் ஒழித்துக் கட்ட முடியும் என்பதை என்.டி.ராமாராவ் நிரூபித்துக் காட்டி இருக்கிறார் என்று கூறினார். இந்திரா காந்தி பின்பற்றும் தவறான கொள்கைகளினால், நாட்டில் ஜனநாயகத்துக்கும், மதச் சார்பின்மை தத்துவத்திற்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டார்.

ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காப்பதில் தெலுங்கு தேசம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்று ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எச். என். பஹுகுணா குறிப்பிட்டார். தெலுங்கு மக்களுக்கு நல்லாட்சியை அளித்துள்ள என். டி. ராமாராவ், நாடு முழுவதிலும் இந்திரா காங்கிரசின் ஊழலையும் யதேச்சாதிகாரத்தையும் ஒழிப்பதற்கு தனது இயக்கத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றும் பஹுகுணா கோரினார்.

எம். ஜி. ஆர்.

இந்த மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் உரை நிகழ்த்துகையில் ராமாராவை வெகுவாகப் புகழ்ந்து பேசினார். ஓர் அரசியல் கட்சியை துவக்கிய 9 மாதங்களுக்குள்ளாக ஆட்சியை என்.டி. ராமாராவ் கைப்பற்றியுள்ளதற்கு ஈடுஇணையே கிடையாது என்று அவர் குறிப்பிட்டார். மக்களின்நலன் ஒன்றை மட்டுமேகருதிராமாராவ்பாடுபடுகிறார் என்றும் எம்.ஜி. ராமச்சந்திரன் சொன்னார்.

எனினும், ராமாராவ் எவற்றையும் துறந்து, காவி உடை தரித்து சந்நியாசம் பெற்றதை மட்டும் தம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று எம். ஜி. ஆர். சொன்னார்.

அகாலி தளத் தலைவர் எஸ். எஸ். பர்நாலா இந்த மாநாட்டில் உரை நிகழ்த்துகையில், இந்தியாவிலிருந்து பிரிந்து செல்லக் கூடிய ''சீக்கிய நாடு'' எதனையும் அகாலி தளம் கோரவில்லை என்று கூறினார். ''நாங்கள் இந்தியர்கள்; தொடர்ந்து இந்தியர்களாகவே இருப்போம்'' என்று அவர் சொன்னார்.

நதி நீர் உரிமைக் காகவும், சண்டீகர் நகருக்காகவும் அகாலி தளத்தினர் போராடி வருவதாகவும், ஆனால் பிரதமர் இந்திரா காந்தியோ சீக்கியர்கள் பற்றி மக்களிடையே தவறான கருத்து ஏற்படுத்துவதற்காக 'காலிஸ்தான்' என்னும் பிரச்னையைப் பிரதமர் இந்திரா கிளப்பிவிட்டிருக்கிறார் என்றும் பர்நாலா புகார் கூறினார்.

ராஷ்ட்ரீய சஞ்சய் மாஞ்ச் தலைவி மேனகா காந்தி பேசுகையில், ஆந்திரத்தில் ஊழலை ஒழிப்பதிலும், மக்களுக்குப் போதுமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தெலுங்கு தேசம்கட்சி பாடுபட வேண்டும் என்றும், அப்போதுதான் அக்கட்சியிடம் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நிறைவேற்றியதாகும் என்றும் கூறினார்.

சரத் பவார்

பிராந்திய கட்சிகளால் நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்திரா காங்கிரசார் ''பூச்சாண்டி'' காட்டுவதாகவும், ஆனால் இது உண்மையல்ல என்றும் எஸ். காங்கிரஸ் தலைவர் சரத்பவார் இந்தமாநாட்டில் கூறினார். மகாராஷ்டிரத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சி விரைவில் ஒழியும் என்றும், எஸ்.காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனதா கட்சித் தலைவர் ரவீந்திர வர்மா உரையாற்றுகையில், ''மக்கள் இயக்கத்தின்'' சின்னமாக என்.டி. ராமாராவ் திகழ்கிறார் என்று குறிப்பிட்டார்.

இந்தியர்கள் அனைவரின் சுயமரியாதையையும் மீட்பதிலும், வறுமையையும் அநீதியையும் எதிர்த்துப் போராடுவதிலும் ராமாராவ் உதவ வேண்டும் என்றும் ரவீந்திர வர்மா கேட்டுக் கொண்டார்.

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் அதிக நன்மை ஏற்படும் வகையில், நமது பொருளாதார திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சி. ராஜேசுவரராவ் கூறினார். இந்திரா காங்கிரஸ் ஆட்சியை ஒழிப்பதில் தெலுங்கு தேசத்தின் வெற்றியை அவர் பாராட்டினார். ''எங்களால் சாதிக்க முடியாததை ராமாராவ் சாதித்து இருக்கிறார்''என்று அவர் சொன்னார்.

இந்திரா காங்கிரஸின் தவறான நடவடிக்கைகளைத் திருத்தியமைப்பதற்கு, கம்யூனிஸ்டு கட்சி அரசின் உதாரணத்தை, இந்திரா காங்கிரஸ் அல்லாத இதர அரசுகள் பின்பற்ற வேண்டும் என்று இடது கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் எம். பசவபுன்னய்யா கேட்டுக் கொண்டார்.

கம்யூனிஸ்ட் கட்சி அரசுகளுக்கு சட்டசபையில் பெரும்பான்மை இருந்த நேரங்களில் கூட மத்திய அரசு திடீரென்று உத்தரவு பிறப்பித்து அவற்றைக் கவிழ்த்தன என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்திரா காங்கிரஸ் அல்லாத கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். தமது கட்சி ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்யாது என்றும், தெலுங்கு தேசத்தை இந்திராகாங்கிரஸின் தந்திரங்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தமது கட்சி உதவும் என்றும் பசவபுன்னய்யா சொன்னார்.

லோகதளத்தின் பொதுச் செயலாளர் எஸ்.என். மிச்ரா பேசுகையில், ராமாராவ் ''ஆந்திரத்துக்குக் கிடைத்த வரப்பிரசாதம்'' என்று பாராட்டினார்.

இந்தக் கூட்டத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் தமிழில் உரையாற்றினார். மேனகாகாந்தி, ரவீந்திரவர்மா, ராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோர் ஆங்கிலத்தில் உரையாற்றினர். மற்றவர்கள் ஹிந்தியில் பேசினர்.

குஜராத்தின் ராஷ்ட்ரீய காங்கிரஸ் தலைவர் ராதுபாய் அதானியும் இக்கூட்டத்தில் உரையாற்றினார். இந்திரா காந்தியின் தலைமையினால் நாட்டின் பொது வாழ்வே களங்கப்பட்டுவிட்டது என்று அவர் சொன்னார்.

ராமாராவ் நன்றி

பாராட்டுகளுக்கு என். டி. ராமராவ் நன்றி தெரிவித்துப் பேசினார். மக்களின் முழு ஆதரவும், ஒத்துழைப்பும் தமக்குஇருக்கும் வரையில் முன்வைத்த காலை தாம் பின் வைக்கப்போவதில்லை என்று ராமாராவ் சொன்னார்.

விவசாயத்தில் இடைத்தரகர்களை ஒழித்து, விவசாயிகளுக்கு மேலும் நன்மை கிடைக்க அடுத்த ஆண்டு தாம் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ராமாராவ் சொன்னார். விவசாய விளை பொருட்களின் விலை நிர்ணயத்தில் மத்திய அரசின்கொள்கையை அவர் கண்டித்தார்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் சுமார் 3 லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

கடன் வாங்கி தருவதாக கூறி மோசடி செய்ததாக ஆறு பேர் கைது

சென்னை, மே 29—காப்பி, தேயிலைத் தோட்டம் போன்ற எஸ்டேட்டுகள் வாங்குவது, பெரும் தொழில்களுக்கு தேவையான பெரும் தொகையை கடனாக வாங்கித் தருவது என்கிற பெயரில் மோசடி செய்து ஏமாற்றியதாக ஆறுபேரை மாநில குற்றப் புலனாய்வுத்துறை போலீசார் கைது செய்யுள்ளனர். மூன்று லட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாய் வரை இவர்கள் மோசடி செய்திருப்பதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

லட்சக்கணக்கான ரூபாயை லகுவில் கடனாக வாங்கித் தருவதாகவும், இதற்கு தங்களுக்கு கமிஷனும், கடன் தொகைக்கான வட்டி முன் பணமும் கொடுத்துவிட வேண்டும் என்று இவர்கள் தங்களிடம் கடன் கோருபவர்களிடம் பேரம் பேசுவார்கள் என்று கூறப்படுகிறது. முதலில் இது பற்றி ஒரு புகார் வந்தது. மாநில குற்றப் புலனாய்வுத்துறையினர் தொடர்ந்து தீவிரமாக புலன் விசாரணை நடத்தியதன் விளைவாக இதே கும்பல் பல பேரை ஏமாற்றி மோசடி செய்தது தெரிய வந்தது.

''கடன் தொகை என்று சொல்லி கத்தை கத்தையாக நூறு ரூபாய் நோட்டுகளைப் பெட்டியில் வைத்து இவர்கள் கொடுப்பார்கள். அந்த ரூபாய் நோட்டு கட்டின் மேல்புறத்திலும் அடிப்புறத்திலும் மட்டுமே புத்தம் புதிய சில நூறு ரூபாய் நோட்டுக்கள் இருக்கும். மற்றவை அனைத்தும் நூறு ரூபாய் நோட்டு அளவில் உள்ள வெட்டப்பட்ட காகிதங்களாக இருக்கும். பணத்தை இவர்கள் கொடுத்துவிட்டு, கடன் பெற்றவர்கள் பின்னாலேயே தொடர்ந்து வேறு ஒரு கும்பலை அனுப்புவார்கள். அந்த கும்பல் போலீஸ் வேடத்தில் சென்று பெட்டியில் வைத்திருக்கும் பணம் கடத்தல் அல்லது கள்ளப் பணம் என்றும், அதை ஒப்படைக்க வேண்டும் என்றும் மிரட்டி பறித்து செல்லும். இதை தான் இந்த மோசடிக் கும்பல் கையாண்டு வந்தது'' என்று கூறப்படுகிறது.

இவர்களிடம் ஏமாந்த கேரள மாநிலம் கொச்சியைச் சேர்ந்த பேபி தாமஸ், ஜானி கொரட்டூர், சேலத்தைச் சேர்ந்த மரகதம் தியாகராஜன் ஆகியோர் இது குறித்து போலீசுக்கு புகார் கொடுத்தனர். பேபி தாமஸ், ஜானிகொரட்டூர் ஆகியோரிடம் ஐம்பது லட்ச ரூபாய் அளவுக்கு கடன் வாங்கித் தருதவாகவும் இதற்கு வட்டி முன் பணமாக ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாயை கொடுத்துவிடவேண்டும் என்றும் சொல்லி மோசடி செய்ததாக கூறப்படுகிறது. இதே போல மரகதம் தியாகராஜன் இந்த மோசடி கும்பலிடம் ஏமாந்து பணத்தை பறிகொடுத்தார் என்று சொல்லப்படுகிறது.

இது சம்பந்தமாக இதுவரையில் தட்சிணாமூர்த்தி, ராமு எனப்படும் ராமமூர்த்தி, மதுரையைச் சேர்ந்த ராஜூப்பிள்ளை என்ற நாகசாமிப்பிள்ளை, கோவிந்தன் சேர்வை, பெருமாள் நாயக்கர், நஞ்சுண்டராவ் ஆகிய ஆறுபேரை மாநில குற்றப் புலனாய்வுத்துறை போலீசார் கைது செய்துள்ளனர்.

இவர்களுடைய நூதன மோசடி குறித்து போலீசார் மேலும் தீவிர புலன் விசாரணை நடத்தி வருகிறார்கள். மாநில குற்றப் புலனாய்வுத்துறை போலீஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் கே. கே. ராஜசேகரன் நாயர் உத்தரவின்படி போலீஸ் சூப்பிரண்டெண்ட் நடராஜ், கூடுதல் சூப்பிரண்டெண்ட் திருமலை நம்பி ஆகியோர் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில்

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 'தர்ணா' கிளர்ச்சி

சென்னை. மே. 29—ஊதிய விகித மாற்றம், அகவிலைப்படியை ஊதியத்தோடு இணைத்தல், ஓய்வு பெறும் போது பத்தாயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர்- ஆசிரியர் இயக்கங்களின் கூட்டுக்குழு சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஞாயிறன்று தர்ணா போராட்டம் மேற் கொண்டனர். தாலுக்கா மற்றும் மாவட்ட தலைநகரங்களில் இந்த தர்ணா போராட்டம் நடத்தினர்.

சென்னையில் எழிலகம்எதிரே அதன் மாநில அமைப்பாளர் பி. டி. ஆறுமுகம் தலைமையில் அவர்கள் தர்ணா மேற் கொண்டனர்.

கிரேக்க கப்பலில் ரூ. 121 கோடி போதைப் பொருள் சிக்கியது?

கெய்ரோ, மே. 29—சூயஸ் கால்வாய் வழியாகச் செல்வதற்குக் காத்திருந்த கிரேக்க கப்பல் ஒன்றை எகிப்து மற்றும் கிரேக்க போலீசார் சோதனையிட்டு 12 கோடியே 10 லட்சம் டாலர் (சுமார் 121 கோடி ரூபாய்) மதிப்புள்ள போதைப் பொருட்களைக் கைப்பற்றினர். இத்தகவலை ரோஸ் அல் யூசப் என்ற வாரப் பத்திரிகை இன்று வெளியிட்டுள்ளது.

கப்பலின் ரகசிய அறைகளில் 500 கிலோ கஞ்சா, மற்றும் மார்பின் என்ற போதைப் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இது தொடர்பாக கப்பலின் கிரேக்க ஊழியர்கள் 7 பேர் மற்றும் இத்தாலிய பயணி ஒருவரை சூயஸ் போலீசார் கைது செய்தனர் என்றும் அச் செய்தி கூறியது.

கப்பலில் ஏராளமான யந்திரத் துப்பாக்கிகள், வெடி மருந்துகள் இருந்ததாகவும் அது மேலும் தெரிவித்தது.

கடந்த வியாழனன்று சோதனை நடந்ததாகவும் இந்த வழக்கில் கெய்ரோவில் உள்ள அமெரிக்க தூதரக போதைப் பொருள் கட்டுப்பாடு பிரிவு சம்பந்தப்பட்டு உள்ளதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

வறட்சியினால் சேலம் மாம்பழ மார்க்கெட் மந்தம்

சேலம், மே.29— வறட்சி காரணமாக சேலத்திற்கு மாம்பழம் வரத்து குறைந்துள்ளது. இதனால் வியாபரத்தில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டாத்துப்பட்டி, சாமியா சிசுந்து புதூர், வரகம்பாடி, கமலபாடி, நங்கவல்லி, சாரசை ஆரம்பப்பள்ளி, செட்டி சாவடி போன்ற இடங்களிலிருந்தும்தர்மபுரி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் சேலத்திற்கு மாம்பழங்கள் வரும்.

மதுரை, பெரியகுளம் ஆகிய ஊர்களிலிருந்து செங்காவர்க்கம் என்ற வகையும் கேரளத்திலிருந்து கப்பை, கிளிசல் கொண்டூர் ஆகியவையும் அனுப்பப்படுவதுண்டு.

சேலத்திலிருந்து அதிக அளவில் மாம்பழங்கள் ஏற்றுமதியாகும் மல்கோவா, குண்டு, பெங்களூர் நடுசாலை, குட்டவகைகள் இன்னும் 10 நாட்களில் சேலம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தோத்தப்பாரை, நீலம் ஆகியவை ஒருமாதத்திலும் வரும்.

வழக்கமாக 40 முதல் 50 லாரிகளில் மாம்பழங்கள் சேலம்வரும். ஆனால் இந்த ஆண்டு 10 முதல் 20 லாரிப்பழங்களே வந்துள்ளன. மாம்பழம் வரத்து குறைந்து பற்றாக்குறை உள்ளபோதிலும் மாம்பழத்தின் விலை உயரவில்லை என்று ஒரு வியாபாரி கூறினார்.

வித்தியாசமான கல்யாணம்!

கான்பூர், மே. 29-ஹிந்து சாஸ்திர மரபுப்படி எல்லாவித சடங்குகளுடனும்இங்கு ஒரு திருமணம் கோலாகலமாக நடந்தேறியது. ஆனால் ஒரு முக்கிய வேறுபாடும் அதில் இருந்தது.

''மணமகள்'' அழகான ரவிக்கையும் மேலாடையும் அணிந்து தங்கம், வெள்ளி நகைகளையும் அணிந்திருந்தாள். ''மணமகனே'' கால் சட்டையும், புஷ் ஷர்ட்டும் போட்டுக்கொண்டு தலையில் வண்ணத் தலைப்பாகையும் அணிந்து வந்தான். இரட்டை பாண்டு வாத்தியக் கோஷ்டிகள் இனிய இசை முழங்கினார்கள். மணமகளும், மணமகனும் மாலை மாற்றிக்கொள்ளும் சடங்கும் அலங்கார மேடையில் நடந்தது. திருமணம் காண வந்தவர்கள் வாழ்த்துக்கூறவும் தவறவில்லை. ஆனால், இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் நடந்த கல்யாணம் இரண்டு நாய்களுக்கு என்பதுதான் அதிலுள்ள வித்தியாசமாகும்!

பாரதி நூல்கள் மூன்று தொகுப்பாக வெளியிடப்படும்

சென்னை, மே 29—மகாகவி பாரதியாரின் நூல்களை மூன்று தொகுப்புகளாக வெளியிட மூன்று பல்கலைக்கழகங்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான நிதி உதவியை அரசு செய்வதாகவும் தமிழக செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் கூறினார்.

சென்னையில் இராமலிங்கர் பணிமன்றமும் ராஜா அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் 5-வது இசை கலை விழாவில் அமைச்சர் கலந்துகொண்டு சித்திரபாரதி என்ற நூலின் 2-வது பதிப்பை வெளியிட்டுப் பேசினார்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்திடம் பாரதி பற்றிய நூற்றாண்டு மலர் ஒன்றை தயாரித்து வெளியிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. உலகத்தின் பல அறிஞர்களிடமிருந்து பாரதி பற்றிய பல கட்டுரைகள் பெற்று அதனை அப்படியே அந்த மொழியில் அச்சிட்டும், அதன் அருகே ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழியில் அவை மொழி பெயர்க்கப்பட்டும் நூற்றாண்டு மலர் வெளியிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் வீரப்பன் கூறினார்.

பாரதியாருடைய மிகச் சிறந்த பாடல்களை வெளியிடும் பணி சென்னை பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த பணி நடந்து வருகிறது என்றும் பாரதியின் தமிழ் பாடல்களை மூன்று தொகுதிகளாக வெளியிட தமிழ் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

சித்திரபாரதி நூலாசிரியர் ரா. அ. பத்மனாபன், அதற்கு சித்திரம் வரைந்த மணியம் செல்வன், அச்சிட்டோர் வர்கீஸ் ஆகியோரைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கேடயங்களை அமைச்சர் வழங்கினார்.

பாரதியார் சங்கத் தலைவர் நா. மகாலிங்கத்திற்கு அவரது மணிவிழாவை யொட்டி அமைச்சர் தமது சார்பில் பொன்னாடை போர்த்தி சந்தனமாலை அணிவித்தார். சித்திரபாரதியின்முதல்பிரதியை அமைச்சரிடமிருந்து பேராசிரியர் ராமனாதன் பெற்றுக் கொண்டார்.

பாரதியார் கைப்பிரதிகள்பல இடங்களில் சிதறிக் கிடப்பதை ஒன்றாக சேகரித்து ஒரே இடத்தில் வைக்க வேண்டும் என்றும் பாரதி எழுதிய கடிதங்கள் பல தம்மிடம் உள்ளது என்றும், அதனை சென்னையில் உருவாகும் பாரதி மண்டபத்தில் தாம் வைக்க உத்தேசித்துள்ளதாகவும் நூலாசிரியர்பத்மனாபன் கூறினார்.

காஞ்சி காமகோடி பீடத்தின் இளைய சங்கராச்சாரியார் பட்டம் ஏற்றுள்ள ஸ்ரீ சங்கரனின் குடும்பத்தினர், உறவினர்களை இப்படத்தில் காணலாம். இந்தப் படம் ஞாயிற்றுக்கிழமை காலையில் எடுக்கப்பட்டது.

அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டு: செய்திக்கு ஆர். வி. மறுப்பு

திருச்சி, மே. 29— தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க வுடன் இ. காங்கிரஸ் கட்சி கூட்டு சேருவதற்கான கருத்தைத் தாம் ஆதரித்ததாகச் சில பத்திரிகைகளில் வெளியான செய்தியைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் திருச்சியில் ஞாயிறன்று மறுத்தார்.

அடி மட்டத்திலேயே இ. காங்கிரஸ் கட்சி பலப்படுத்தப்பட வேண்டுமென்பதே இ. காங்கிரஸ் ஊழியர்களுக்குத் தாம் விடுக்கும் வேண்டுகோளாகும் என்றும் அவர் சொன்னார்.

ஞாயிறன்று இங்கு நிருபர்களுடன் பேசிய அவர், பொதுத் தேர்தலுக்கு வெகு நாட்கள் இருப்பதால் இப்போது கூட்டு பற்றிச் சிந்திப்பதற்குத் தருண மல்ல என்றும், கட்சியைப் பலப்படுத்துவதே தற்போது தலையாய பணியாகும் என்றும் அவர் சொன்னார். இடைத் தேர்தல் நடக்கும் சாத்யக்கூறு எதுவும் கிடையாது என்றும் அவர் சொன்னார்.

திருச்சிக்கு ஞாயிறு காலை அவர் வந்த போது அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இளைய சங்கராசாரியார்...

(முதல் பக்க தொடர்ச்சி)

யாளமாக அவர் தமது பூணூலை அறுத்து எறிந்தார். சங்கரனுக்கு கமண்டலத்தையும் ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் வழங்கினார்.

இந்த வைபவம் நடந்த போது வேத மந்திரங்கள் ஓதப்பட்டன. மங்கள வாத்தியம் முழங்கியது. அங்கு கூடி இருந்தவர்கள் பக்திப் பரவசத்துடன் ''ஹரஹரசங்கர ஜெயஜெய சங்கர'' என்று முழங்கினர்: ஆர்வத்தில் உந்தப்பட்ட சிலர் பட்டாசுகளையும் வெடித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

குரு உபதேசம்

பின்னர் சங்கரனுக்கு ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் ''குரு உபதேசம்'' செய்தார்.

பின்னர் அவரை, ஸ்ரீகாஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்துக்குள் அழைத்துச் சென்றார். இரு ஆசாரியர்களும் ஸ்ரீ அம்பாளை பூஜித்தனர்.

ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலயத்தில் தங்கக் கவச அலங்காரமும் 1008 கலச அபிஷேகமும் நடைபெறும் மண்டபத்தில் இருவரும் சிறிது நேரம் இருந்தனர்.

அன்னையின் கலக்கம்

15 வயதேயான இளைஞர் சங்கரன், இந்தச் சடங்குகள் யாவும் நடைபெற்றபோது, கொஞ்சம் கூட பதட்டமோ, படபடப்போ அடையாமல் அமைதியாக இருந்தார். அவர் முகம் சாந்தத்துடன் காணப்பட்டது.

சங்கரன் சந்நியாசம் ஏற்ற காட்சியை அவரது பெற்றோரும், குடும்பத்தினரும் அருகிலிருந்து பார்த்தனர்.

சங்கரனின் தந்தை 57 வயதான கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், எந்தவிதமான உணர்ச்சியும் காட்டாமல், அமைதியாக இருந்தார். ஆனால் சங்கரனின் தாயார் அம்பா லட்சுமி அம்மாள் முகத்தில் மட்டும் சற்றே கலக்கம் தென்பட்டது; (சந்நியாசம் ஏற்ற பிறகு, சங்கராசாரிய சுவாமிகளை அவரது பூர்வாசிரம தந்தை அவ்வப்போது சந்தித்துப் பேசலாம்; ஆனால் தாயார் மட்டும் தொலை தூரத்தில் இருந்து மட்டுமே தரிசிக்க முடியும் என்பது விதிமுறையாகும்.)

சங்கரனின் பெற்றோர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், தாயார் அம்பா லட்சுமி அம்மாள் ஆகியோருக்கு, அங்கு கூடியிருந்த பக்தர்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

ஊர்வலம்

துறவறம் ஏற்கும் சடங்கு முடிந்த பிறகு இரு ஆசாரியர்களும், ஆலயத்திலிருந்து, ஸ்ரீமடத்திற்கு மேள தாளங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இளைய சுவாமிகள் ஸ்ரீமடத்திலேயே தங்கி இருந்து தர்க்கம், வியாகரணம், மீமாம்சம் ஆகியவற்றை வேதபண்டிதர்கள் மூலம் நன்கு கற்றுத் தேர்ச்சி அடைவார்.

மடத்தின் அன்றாட நிர்வாகம், பூஜா விதிமுறைகள் ஆகியவையும் அவருக்குக் கற்பிக்கப்படும். சில காலத்துக்குப் பிறகு, அவர் ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகளுடன் சேர்ந்து சுற்றுப் பயணங்களை மேற்கொள்வார்.

பின்னர், காஞ்சியின் மூத்த ஆசாரியார்களின் முடிவுக்குஏற்ப சில ஆண்டுகள் கழித்து, அவர் முறைப்படி பீடாதிபதியாகப் பதவியேற்பார், அவ்வாறு பட்டமேற்கும்போது, அவர் இந்த பீடத்தின் 70வது பீடாதிபதியாக விளங்குவார்.

தற்போது காஞ்சி காமகோடி பீடத்தின் பட்டத்தை அலங்கரிக்கும் ஸ்ரீஜெயேந்திரசரசுவதி சுவாமிகள்,1954மார்ச்23ந்தேதியன்று இதே போலகாஞ்சியில் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் முன்னிலையில் துறவறம் மேற்கொண்டதுநினைவிருக்கலாம். அந்தப்புனித வைபவம், ஸ்ரீஏகாம்பரேசுவரர் ஆலயம் அருகேஉள்ள ஸ்ரீசர்வதீர்த்தக் குளக்கரையில் நடைபெற்றது.

இரு ஆசாரியர்கள் எடுத்த முடிவு

இப்போது இளைய சங்கராசாரியாராக பட்டம் ஏற்றுள்ள சங்கரனை இப்பட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கலாம் என்பது பெரியவர் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள், ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் ஆகிய இருவரும் சேர்ந்து எடுத்த முடிவாகும்.

இந்தப் பட்டத்துக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதுபற்றிக் கடந்த சில மாதங்களாகவே தீவிர பரிசீலனை நடந்து வந்தது; தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு வேத பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் இதற்கெனபரிசீலிக்கப்பட்டனர். இறுதியில் சங்கரனையே தேர்ந்தெடுப்பது என்று இரு ஆசாரியார்களும் முடிவு செய்தனர், சங்கரனின் நடவடிக்கைகளை நன்கு கவனித்த பிறகே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சங்கரனை காஞ்சி மடத்தின் இளையவாரிசாக்க பரமாசாரிய சுவாமிகள் விரும்புகிறார் என்ற செய்தி 6 மாதங்களுக்கு முன்பே சங்கரனது தந்தை கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம் கூறப்பட்டு இருந்தது. ஆனால் இது பற்றி அவரிடம் 10 நாட்களுக்குமுன்பு தான் முறைப்படி அறிவிக்கப்பட்டது.

சங்கரனின் பெற்றோர் இருவரையும் ஹைதராபாதுக்கு வரும்படி, பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள் ஆக்ஞை இட்டிருந்தார்; அதன்படி இருவரும் அங்கு சென்றனர்.

சங்கரனை ஸ்ரீமடத்தின் இளைய சங்கராசாரியாராக்க விரும்புவதாக அவர்களிடம் பரமாசாரிய சுவாமிகள் கூறினார்; அவர்களும் மகிழ்ச்சியுடன் அதற்கு ஒப்புதல் தெரிவித்தனர்.

வேத விற்பன்னர் குடும்பம்

சங்கரனின் குடும்பமே வேத விற்பன்னர்களின் குடும்பமாகும். பொன்னேரி அருகிலுள்ள தண்டலம் என்னும் கிராமமே இவர்களது சொந்த ஊர். சங்கரனின் தந்தையான கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தண்டலத்தில்உள்ள கைங்கரிய சபா பாடசாலையில் பல ஆண்டுகளாக ரிக் வேதம் போதித்து வந்தார். அவர் தெலுங்கு பிராம்மண சமூகத்தைச் சேர்ந்தவர்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் (57 வயது) அம்பாலட்சுமி அம்மாள் (47 வயது) தம்பதியருக்கு மொத்தம் 8 குழந்தைகள்; (5 மகன்கள், 3 புதல்விகள்),

அவரது மூத்த புதல்வர் ஒரு ''ரிலே போஸ்ட் மாஸ்டர்'' ஆகப் பணியாற்றி வருகிறார்; இரண்டாவது புதல்வர் அம்பத்தூர் தொழிற் பேட்டையில் பணியாற்றி வருகிறார். மூன்றாவது புதல்வர் சென்னை தியாகராயர் கல்லூரியில் பி.எஸ்சி. வகுப்பில் படித்து வருகிறார். 3 புதல்விகளில், இன்னமும் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டியுள்ளது.

சங்கரன் அவரது நான்காவது குழந்தையாவார், 1969ம்வருடம் மார்ச் மாதம் 13ந் தேதி, உத்திராட நட்சத்திரத்தில் சங்கரன் பிறந்தார். 6வது வகுப்பு வரையில் படித்த பிறகு, தந்தையின் வேத பாடசாலையிலேயே சேர்ந்து 7 ஆண்டுகளாக ரிக் வேதம் படித்து வந்தார்.

புருசெல்ஸ், (பெல்ஜியம்), மே. 29— இந்திய- ஐரோப்பிய பொருளாதாரச் சந்தை (இஇசி) கூட்டு கமிஷன் கூட்டம் நாளை (30ம் தேதி புருசெல்ஸ் நகரில் நடைபெற உள்ளது.

தினப் பலன்

திங்கட்கிழமை

30-5-83, வைகாசி௴, 16உ

கிருஷ்ணபக்ஷம், சதுர்த்தி திதி' இன்று பூராவும் உள்ளது. பூராட நட்சத்திரம் மாலை மணி 4-48வரை பிறகு உத்திராட நட்சத்திரம்; சித்த யோகம்.

இன்று - சங்கடஹர சதுர்த்தி கரி நாள்.

மதுரை, ஸ்ரீ கூடலழகர் கெருட சேவை.

காஞ்சீபுரம், ஸ்ரீ வரதராஜப்பெருமாள், திருத்தேர் விழா.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், ஸ்ரீ விநாயகப் பெருமான் பவனி வருதல்.

காலை மணி 7-30 முதல் 9 வரையிலும் ராகு காலம்; காலை மணி 10-30 முதல் 12 வரை எமகண்டம்; கிழக்கு சூலம்.

காலை மணி 6 முதல் 7-30வரையிலும் 9 முதல் 10-30 வரையிலும் பகல் மணி 1-30 முதல் 6 வரையிலும் இரவு மணி 7-30 முதல் 9 வரையிலும் நல்ல காலங்கள்.

ராசி பலன்கள

மேஷம் - காரிய தாமதம்
ரிஷபம் - புதிய முயற்சிகள்
மிதுனம் - காரியானுகூலம்
கடகம் - வெற்றிகள்
சிம்மம் - சுலபமாக நன்மை
கன்னி - பண வரவு
துலாம் - நண்பரால் உதவி
விருச்சிகம் - அனுகூலச் செய்தி
தனுசு - லாப தினம்
மகரம் - காரியானுகூலம்
கும்பம் - செலவினங்கள்
மீனம் - சுலபமாக நன்மை

செவ்வாய்க்கிழமை

30-5-83, வைகாசி௴, 17உ

கிருஷ்ணபக்ஷம், சதுர்த்தி திதி, காலை மணி 6-11 வரை, பிறகு பஞ்சமிதிதி, உத்திராட நட்சத்திரம், மாலை மணி 7-19 வரை பிறகு திருவோண நட்சத்திரம், சித்த யோகம்.

இன்று - கரி நாள்
பஞ்சமி திதி.

சுவாமிமலை, ஸ்ரீ முருகப்பெருமான், பேராயிரங்கள் அமைந்த தங்கப் பூமாலை சூடியருளல். தருமபுரம், ஸ்ரீ ஞானபுரீசுவரர், திருவுலா, பவனி.

மாலை மணி 3 முதல் 4-30 வரை ராகு காலம். காலை மணி 9 முதல் 10-30 வரை எமகண்டம். வடக்கு சூலம்.

காலை மணி 7-30 முதல் 9 வரையிலும் 10-30 முதல் 3 வரையிலும் மாலை மணி 4-30 முதல் 6 வரையிலும் இரவு மணி 7-30 முதல் 9 வரையிலும் நல்ல காலங்கள்.

ராசி பலன்கள

மேஷம் - அனுகூலச் செய்தி
ரிஷபம் - காரிய தாமதம்
மிதுனம் - பண வரவு
கடகம் - புதிய முயற்சிகள்
சிம்மம் - லாப தினம்
கன்னி - சுலபமாக நன்மை
துலாம் - அனுகூல தினம்
விருச்சிகம் - செலவினங்கள்
தனுசு - செலவினங்கள்
மகரம் - பிரயாணங்கள்
கும்பம் - சுலபமாக நன்மை
மீனம் - அனுகூல தினம்

கட்டிடம் இடிந்து 2பேர் சாவு

புதுச்சேரி, மே. 29—கட்டிடம் ஒன்று சனிக்கிழமை இரவு இடிந்து விழுந்ததில் தொழில் பேட்டையைச் சேர்ந்த இரு வாட்ச்மேன்கள்நசுங்கி செத்தனர்.

கட்டிடம் முன்பு இருவரும் காவல் காத்துக் கொண்டிருந்த போது பலத்த காற்று வீசியது காற்றின் பலம் தாங்காது அந்த கட்டிடம் இடிந்ததில் இருவரும் சிக்குண்டு இறந்தனர்.

வழக்கு பதிவு செய்து புலன் விசாரணையை போலீசார் மேற்கொண்டுள்ளனர்.

கொடைக்கானல் ஏரியில்

படகு கவிழ்ந்து கல்லூரி மாணவர் பலி

மதுரை, மே. 29—கொடைக்கானல் ஏரியில் படகு கவிழ்ந்து கல்லூரி மாணவர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் சனிக்கிழமையன்று நடந்துள்ளது.

பி.காம். முதலாண்டு படித்து வந்த அந்த மாணவரும் மற்றும் இரு நண்பர்களும் கொடைக்கானலுக்கு 'பிக்னிக்' சென்றனர். நாட்டுப் படகு ஒன்றில் ஏரியில் உல்லாசமாகச் சென்றனர். திடீரென்று படகு கவிழ்ந்து விட்டது. நீரில் மூழ்கி பி.காம். மாணவர் உயிரிழந்தார். இரு நண்பர்களையும் இன்னொருபடகு மீட்டது. உயிரிழந்தவரின் சடலத்தையும் அது கண்டு மீட்டுக் கொண்டு வந்தது.

விருத்தாசலம் அருகே

இடி தாக்கி இருவர் பலி

விருத்தாசலம், மே.29— விருத்தாசலம் அருகே இடி தாக்கி இருவர் மாண்டனர். விருத்தாசலத்தின் சுற்றுப் பகுதிகளில் சுமார் ஒரு வார காலமாக பலத்த மழை பெய்து வந்துள்ள போது இங்கு நகரில் மட்டும் சிறு தூரலோடு நின்று இருந்தது. சனிக் கிழமை இரவு ஒரு மணி நேரம் நகரில் பலத்த மழை கொட்டியது. அதன் பின்பும் இரவு வெகு நேரம் மழை பெருந்தூறலாக விழுந்து கொண்டு இருந்தது. மே-26-ந் தேதி பெய்த மழையின் போது ஆலடி, இலுப்பூர், புலியூர், மதியனூர் பகுதிகளில் சுமார் ஒரு மணி நேரம் பலத்த காற்றுடன் மழை பெய்ததில் சுமார் 20 நிமிடங்களுக்கு ஆலங் கட்டிகள் விழுந்தன.

மிஜோரம் மந்திரி ராஜினாமா

அய்சாவல், மே. 29—மிஜோரம் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜயிராம் தங்கா ஞாயிறன்று முதலமைச்சர் பிரிக். டி. சைலோவிடம் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

அய்சாவல் அருகே சனியன்று நடந்த பஸ் விபத்தில் 14 பேர் இறந்ததை அடுத்து போக்குவரத்து அமைச்சர் ராஜிநாமா செய்துள்ளார்.

எனினும், ஜயிராம் தங்காவைத் தொடர்ந்து பதவியில் இருக்குமாறு முதலமைச்சர் கூறியுள்ளார். அந்த அமைச்சரின் ராஜிநாமா ஏற்கப்படுமா என்பது பற்றி தெரியவில்லை.

ஆங்கிலம் கற்க...
Prof. J. SRICHANDRAN,
M.A., அவர்களின் தமிழ் விளக்கத்துடன் கூடிய நூல்கள்:
1. English Grammar Rs. 7-00
2. Important Sentence Structure Rs. 3-75
V.P.P. யில் பெற ரூ. 2-00 M.O. செய்க. மீதியைத் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெறுக.
வர்த்தமானன் பதிப்பகம்
1.மகாலிங்கம் முதல்குறுக்குத்தெரு,
மகாலிங்கபுரம், சென்னை-600034

BANK PROBATIONARY OFFICERS EXAM
CENTRAL BANK OF INDIA
235 vacancies of POs
Written test on 31.7.1983
Join our success oriented BANK RECRUITMENT PROBATIONARY OFFICER COURSE by POSTAL TUITION and avail of expert guidance from India's only specialised and largest BANK RECRUITMENT TRAINING INSTITUTE to prepare for this PO. examination.
For details of our course please write with Rs.2/- postal order to:-
NSB NATIONAL SCHOOL OF BANKING
Gokhale Rd. (N),
Dadar,
Bombay-400 028
Telephone:466280
Gram:
BANKSCHOOL
Our common BRPO Course will fully prepare you for this Central Bank P.O. test, Associate Banks P.O. test on 26.6.83 and LIC AAO test for 120 vacancies in July 1983.
NS/782